| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **163/2017** |
| **DATE** | : | **21.04.2026** |
| **பெயர்** | : | **சேகர்** |
| **தந்தை பெயர்** | : | **பச்சையப்பன்** |

**<u>பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்து கலெக்டர் அலுவலகத்திற்கு பின்புறம் உள்ள வேகை ஆற்றில் புறம்போக்கில் அமைந்துள்ளது என்றால் ஆற்று புறம்போக்கு கிடையாது ஆனால் புறம்போக்கு இடத்தில் தான் அமைந்துள்ளது. தாவா சொத்திற்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் கிரைய ஆவணம் உள்ளது ஆனால் பதிவு செய்யப்படவில்லை. பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் எதுவும் எனது சொத்திற்கு வருவாய் துறையில் இருந்து வழங்கப்படவில்லை. தாவா சொத்தில் நான் கட்டியுள்ள வீட்டிற்கு கட்டிட அனுமதி எதுவும் வாங்கவில்லை ஆனால் வரி செலுத்தி வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு வேகவதி ஆறு என்பதால் அரசாங்கத்திற்கு அந்த நிலத்தை பாதுகாத்து பரமரிக்கும் உரிமை உண்டு என்றால் எனது வீடு ஆற்றில் இல்லை.

2. சாட்சியிடம் 17.07.2017 தேதியிட்ட ஒரு அறிவிப்பு நகல் காண்பிக்கப்பட்டது அதில் எனது மனைவி S. கற்பகம் கையெழுத்து இட்டு அறிவிப்பை வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 10.07.2017 அன்று கொடுக்கப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், எனது சொத்தை புறம்போக்கு என்று சொன்னார்கள் அதனால் தாக்கல் செய்தேன். வீட்டு வரி, மிண் இணைப்பு ரசீதுகள் ஆகியவை உரிமை ஆவணங்கள் ஆகாது தாவா சொத்து எக்காலத்திலும் நான் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

3. தாவா சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்பதால் நான் கோருவது போல் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**